# இமாமத்

தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் இமாமத்தின் பொறுப்பு உண்மையில் ஆட்சியாளரான இமாம் அல்லது அமீருடைய பொறுப்பின் ஒரு வகையாகும். இதற்காகவே, இறைத்தூதர் ﷺ அவர்கள் அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆகவேதான், இந்த இமாமத் **இமாமத் ஸுங்க்ரா** எனப்படுகின்றது. தொழுகையில் இமாமத் செய்வது இஸ்லாமிய சமுதாய அமைப்பின் கட்டுப்பாடு, கட்டுப்படுதல், கீழ்ப் படிந்து நடந்துகொள்ளுதல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டின் ஒரு உயர்வான எடுத்துக்காட்டாகும். தொழுகையாளிகள் மிகவும் கூர்நோக்குடனும் ஒரு வருடைய தகுதி மற்றும் ஆற்றலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் இமாம்களையே விரும்புகின்றனர். இவ்வகையில், அறிவாற்றல் மற்றும் கூர்நோக்கு, தொழுகை பற்றிய விதிமுறைகள் மற்றும் திருக்ஃகுர்ஆனை முறையாக ஓதும் பயிற்சியும் அனுபவமுமுள்ள ஒருவரே இந்த இமாமத் திற்குத் தகுதியும் உரிமையும் உடையவராவார்.

## இமாமத்திற்கான நிபந்தனைகள்

1 இமாமத் செய்வதற்கு ஒருவர் முஸ்லிமாக இருப்பது அடிப்படையான நிபந் தனையாகும்.

2 அறிவாற்றல் மிக்கவராக இருக்கவேண்டும், பைத்தியக்காரராகவோ மனநிலை குன்றியவராகவோ இருக்கக்கூடாது

3 வயது வந்தவராக இருக்கவேண்டும், சிறுவயதுள்ளவராக இருக்கக்கூடாது

4 ஆணாக இருக்கவேண்டும், ஏனெனில், ஒரு பெண் அல்லது பெண் சுபாவமுள்ள வர் இமாமத் செய்யக்கூடாது. இருப்பினும், பெண்கள் மட்டுமே தொழுபவர் களாக உள்ள ஜமாஅத்தாக இருந்தால் ஒரு பெண் இமாமத் செய்யலாம்

5 ஃகுர்ஆன் திருத்தமாக ஓதக்கூடியவராகவும், தொழுகையின் அம்சங்களை முறையாக நிறைவேற்றுபவராகவும் இருக்கவேண்டும். சூரா ஃபாதிஹாவை யும் சீரான முறையில் ஓதும் அனுபவமில்லாத ஒருவருக்குப் பினனால் அதனைத் திருத்தமாக ஓதக்கூடிய ஒருவர் தொழுகையை நிறைவேற்றக் கூடாது. இவ்வாறே, எவர் ஒருவர் ஊனமுடையவராக, ருகூஉ, சஜ்தா ஆகி யவை சரியாக செய்ய இயலாத நிலையிலுள்ளவருக்குப் பின்னாலும் எவரும் தொழுகையை நிறைவேற்றக்கூடாது

6 ஒரு இமாமுடைய உச்சரிப்பு தெளிவானதாக இருக்கவேண்டும், திக்குவாய், தெற்றிப்பேசுபவராகஇருக்கக்கூடாது, தெளிவாக சீரான முறையில் ஓதும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்

7 உடல் ஆரோக்கியக் குறைபாடுகள், உதாரணமாக, அவ்வப்போது காற்று வெளிப்படுவது அல்லது சலிசல்போல் போன்ற வியாதிகளையுடையவராகவோ அல்லது வேறு எந்தக் குறையும் உள்ளவராக இருக்கக்கூடாது

www.uzairfalahi.com

## இமாமத் செய்வதற்கு விரும்பத்தகாதவர்கள்

*பாவமான காரியங்களைச் செய்யும் வழக்கமுடையவர், குஃப்ரு அளவிற்கு இல்லாத பித்அத்துக்களைக் கடைபிடிப்பவர், தொழுகையாளிகள் விரும்பாத ஒருவர், ராகங்கள் மிகுந்த வகையில் ஃகுர்ஆன் ஓதுபவர், சரியான முறையில் எழுத்துக்களை உச்சரிக்கும் ஆற்றலும் அறிவும் இல்லாதவர் ஆகியோர் இமாமத்திற்கு விரும்பத்தகாதவர்களாவர்.*

## ஒரு இமாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயங்கள்

1 **ஸஃப்புகளை சரிசெய்யவேண்டியது ஒரு இமாமுடைய பொறுப்பாகும்** *இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுவார்கள்:*

سَوُّوا صُفُوفَكُمْ، فَإِنَّ تَسْوِيَةَ الصُّفُوفِ مِنْ إِقَامَةِ الصَّلاَةِ (مسلم)

*பொருள்: மக்களே, உங்களுடைய ஸஃப்புகளை நேராக வைத்துக் கொள்ளுங்கள், ஏனெனில், ஸஃப்புகளை நேராக வைத்துக்கொள்வது தொழுகையை நிலைநாட்டுவதாகும் (முஸ்லிம்). மக்கள் தொழுகைக்காக நிற்கும்போது இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுவார்கள்:*

أَقِيمُوا صُفُوفَكُمْ، وَتَرَاصُّوا (البخاري)

*பொருள்: மக்களே, உங்களுடைய ஸஃப்புகளை நேராக வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் நெருக்கமாக நின்றுகொள்ளுங்கள் (புக்ஹாரி)*

2 **இமாம் மக்களுடைய நலனைக் கருதி தொழுகையை லேசானதாக ஆக்கி நிறைவேற்றவேண்டும்** *இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

إِذَا صَلَّى أَحَدُكُمْ لِلنَّاسِ، فَلْيُخَفِّفْ، فَإِنَّ مِنْهُمُ الضَّعِيفَ وَالسَّقِيمَ وَالكَبِيرَ، وَإِذَا صَلَّى أَحَدُكُمْ لِنَفْسِهِ فَلْيُطَوِّلْ مَا شَاءَ (أكثر المحدثين)

*பொருள்: உங்களில் எவரும் மக்களுக்கு இமாமாக தொழுகையை நடத்தினால் அதனை லேசானதாக நிறைவேற்றுங்கள், ஏனெனில், தொழுகையாளிகளுள் வலிமையற்றவர்கள், நோயாளிகள் மற்றும் வயோதிகர்களும் இருப்பார்கள். இருப்பினும், நீங்கள் தனியாகத் தொழுகை நிறைவேற்றும்போது அதனை நீண்டதாக ஆக்கிக்கொள்ளுங்கள் (பெரும்பாலான முஹத்தித்ஸீன்கள்).*

www.uzairfalahi.com

**3 இமாம் அதிகமான மக்களுக்கு முழுதொழுகையுமம் ஜமாஅத்துடன் நிறைவேற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முதல் ரகஅத் தொழுகையை நீண்டதாக ஆக்கவேண்டும்**

**4 சலாம் சொன்ன பிறகு தொழுகையாளிகளை நோக்கித் திரும்பி உட்கார்ந்து கொள்ளவேண்டும்**

**ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றுபவர்களுக்கான விதிமுறைகள்**

**1 இமாமை முழுமையாகப் பின்பற்றவேண்டும்** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

أَمَا يَخْشَى أَحَدُكُمْ إِذَا رَفَعَ رَأْسَهُ قَبْلَ الإِمَامِ، أَنْ يَجْعَلَ اللَّهُ رَأْسَهُ رَأْسَ حِمَارٍ، أَوْ يَجْعَلَ اللَّهُ صُورَتَهُ صُورَةَ حِمَارٍ (أكثر المحدثين)

*பொருள்: இமாம் எழுவதற்கு முன்பாகத் தன்னுடைய தலையைத் தூக்குபவர்களுடைய தலை அல்லது முகத்தை அல்லாஹ் தஆலா கழுதையின் முகத்தைப்போன்று ஆக்கிவிடக்கூடாது என்ற அச்சம் இருக்கின்றது (பெரும்பாலான முஹத்திஸீன்கள்).*

**2 ஒருவர் தொழுகைக்காகப் பள்ளிவாசலில் வந்து தொழுகை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாகக் கண்டால், அவர் தக்பீர் தஹ்ரீமஹ் சொல்லி தொழுகையில் சேர்ந்துகொள்ளவேண்டும். இமாம் ருகூஉ அல்லது சஜ்தாவின் நிலையில் இருந்தால் இரண்டாவது தக்பீர் சொல்லி ருகூஉ அல்லது சஜ்தாவில் கலந்துகொள்ளவேண்டும்.** *ரகஅத்துக்கள் ஏதும் விடுபட்டுவிட்டால் அதனைப் பிறகு பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். அவர் இமாமை ருகூஉ நிலையில் இருக்கும்போது தொழுகையில் இணைந்துகொண்டால் அவர் அந்த ரகஅத்தை அடைந்துவிட்டதாகக் கருதப்படும், அந்த ரகஅத்திற்கான ஃகிராஅத் ஓதவேண்டியதில்லை. ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

مَنْ أَدْرَكَ رَكْعَةً مِنَ الصَّلاَةِ، فَقَدْ أَدْرَكَ الصَّلاَةَ

*பொருள்: எவர் தொழுகையின் ஒரு ரகத்து அடைந்துவிட்டாரோ அவர் தொழுகையை அடைந்துவிட்டார் (இமாம் ஜமாஅத்துடன் நிறைவேற்றினார்) (புக்ஹாரி, முஸ்லிம்)*

**3 ஒரு ஸஃப்பில் தனியாகவோ அல்லது ஸஃப்புகளுக்குப்பின்னால் தனியாகவோ தொழுவது விரும்பத்தக்கதல்ல**

**4 இமாம் மற்றும் தொழுகையாளிக்கிடையில் திரை அல்லது சுவர் இருக்குமானால், பின்னால் தொழுபவர்கள் இமாமுடைய குரலைக் கேட்டுக்கொண்டும்**

www.uzairfalahi.com

**இமாமுடைய பல்வேறு நிலைகளை அறிந்துகொள்ளமுடிகின்றது என்றால் தவறு ஏதுமில்லை.** *இவாவாறே, பின்னால் தொழுபவர்கள் நின்று கொண்டிருக்கும் இடம் இடப்பற்றாக்குறையின் காரணமாக இமாம் நிற்குமிடத்தைவிட உயரமான மட்டத்தில் இருந்தாலும் தவறில்லை.*

5 **இமாமை பின்பற்றித்தொழுபவர் ஒருவர் மட்டும் இருந்தால், அவர் ஆணாக இருப்பின் இமாமுக்கு வலது புறமாக சற்று பின் தள்ளி நிற்கவேண்டும். ஆனால், பெண்ணாக இருந்தால் மஹ்ரமானவராக இருந்தாலும் இமாமுக்குப் பின்னால் மட்டுமே நிற்கவேண்டும்.**

6 **இமாமுக்குப் பின்னால் முதல் ஸஃப்பில் அறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஹாபிஸ்ஜ்கள் நிற்பது விரும்பத்தக்கது.** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

لِيَلِنِي مِنْكُمْ أُولُو الْأَحْلَامِ وَالنُّهَى ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ

*பொருள்: எனக்குப் பின்னால் அருகில் அறிவும் ஆற்றலுமிக்கவர்கள் நிற்கவேண்டும், அவர்களையடுத்து அவர்களைவிட சற்றுக் குறைந்த அனுபவமுள்ளவர்களும், அவர்களையடுத்து மேலும் குறைந்த அறிவுத் திறன்மிக்கவர்களும் நிற்கவேண்டும். (முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, அஹ்மத்).*

www.uzairfalahi.com

7 **இமாமுக்குப் பின்னால் ஸஃப்புகளின் வரிசை இவ்வாறு இருக்கவேண்டும்: முதலில் ஆண்கள் நிற்கவேண்டும், ஆண்களுடைய ஸஃப்பிற்குப் பின்னால் சிறுவர்களுடைய ஸஃப்பு நிற்கவேண்டும், கடைசியில் பெண்களுடைய ஸஃப்பு நிற்கவேண்டும்.**

8 **முதல் ஸஃப்பில் இடம்பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும்.** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى الصَّفِّ الْأَوَّلِ

*பொருள்: அல்லாஹ்வும் மலக்குமார்களும் முதல் ஸஃப்பில் நிற்பவர்கள்மீது சாந்தியைப் பொழிகின்றார்கள் (அஹ்மத், அபூதாவூத், இப்னு மாஜா).*

9 **இமாமைப் பின்பற்றித்தொழுபவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்து இமாமுடைய குரல்கடைசி ஸஃப் வரையில் சென்றடையவில்லையென்றால், இமாம் தக்பீர் சொல்வது அனைவருக்கும் சென்றடையும்வகையில் இடையிடையே முகப்பிர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் அனைவருக்கும் கேட்கும் வகையில் உரத்தக் குரலில் சொல்லவேண்டும். தேவையின்றி முகப்பிர்களை நியமிக்கக் கூடாது.**

## ஜமாஅத்துடன் தொழுகையை மீண்டும் திருப்பித் தொழுதல்

ஒருவர் தொழுகையைத் தனியாகவே தொழுதுவிட்டாலும் அவர் ஜமா அத்துடன் அதே தொழுகையை மீண்டும் நிறைவேற்றுவது அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில், இரண்டாவதாக நிறைவேற்றிய தொழுகை அவருக்காக மாற்றுத் தொழுகையாகக் கருதப்படும். ஹஜ்ரத் அபூ சயீத் க்ஹுத்ரி (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னு டைய தோழர்களுடன் ளுஹர் தொழுகை தொழுதார்கள், அப்போது ஒரு நபித்தோழர் வந்தார், அவரிடம் இறைத்தூதர் ﷺ அவர்கள் தாமதமாக வந்ததற்கான காரணத்தைக் கேட்டார்கள், அவர்கள் அதற்கான காரணத்தைக் கூறிவிட்டுத் தொழுகைக்காக நின்றுகொண்டார். இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறினார்கள், இவருடன் சேர்ந்து நன்மையைச் செய்பவர்கள் எவரும் உண்டா? அவரும் இவருடன் தொழுகையில் இணைந்துகொள்ள வேண்டும். இதனைக்கேட்ட ஒரு நபித்தோழர் அவருடன் தொழுகையில் இணைந்து கொண்டார். (அஹ்மத்)

## தொழுகையை நடத்திக்கொண்டிருக்கும்போது இமாம் தனக்கு ஏதும் காரணத்தால் தொடர இயலாத நிலை ஏற்பட்டால் அவர் மற்றவரை இமாமாக முன் நிறுத்தலாம்

தொழுகை நடந்துகொண்டிருக்கும்போது இமாமுக்கு தொழுகையைத் தொடரமுடியாத ஒரு காரணம் ஏற்பட்டுவிடுமானால் அவர் மற்ற ஒருவரை இமாமாக முன் நிறுத்தலாம், மீதியுள்ள தொழுகையை இரண்டாவது இமாம் முடித்துவைப்பார், இந்த இமாம் பின்னால் சென்றுவிடவேண்டும்.

## பெண்கள் பள்ளிவாசல்களில் வருதல்

தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதற்காகப் பெண்கள் பள்ளி வாசலில் வரலாம். ஆனால், அவ்வாறு செல்வதானால், அவர்கள் அலங் காரம் செய்துகொண்டு செல்லக்கூடாது, நறுமணமும் பூசிக்கொள்ளக் கூடாது. இருப்பினும், அவர்கள் தங்கள் வீட்டிலேயே தொழுதுகொள்வது இதைவிடச் சிறந்ததாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَتَمْنَعُوا إماءَ اللهِ مَسَاجدَ اللهِ

பொருள்: *அல்லாஹ்வின் அடியார்களான பெண்களை அல்லாஹ்வின் இல்லங்களில் பிரவேசிப்பதைத் தடுக்காதீர்கள்.* இருப்பினும், அவர்கள் நறுமணம் பூசிக்கொண்டு அங்கே செல்லக்கூடாது (அபூ தாவூத், அஹ்மத்). பெண்கள் தங்களுடைய ஜமாஅத்தைத் தனியாகவே செய்துகொள்ளலாம், அவர்களுடைய ஜமாஅத்திற்காக பாங்கு மற்றும் இஃகாமத் சொல்லத் தேவையில்லை.

* * *



www.Uzairfalahi.com